செய்தி வெளியீடு எண்: 554 நாள்: 29.07.2020

**இன்று (29.07.2020), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் தலைமைச் செயலகத்தில், கொரோனா வைரஸ் நோய்த் தொற்றுத் தடுப்புப் பணிகள் குறித்து, காணொலிக் காட்சி மூலம் மாவட்ட ஆட்சித்தலைவர்களுடனான ஆய்வுக் கூட்டத்தில் ஆற்றிய முடிவுரை:**

அனைவருக்கும் வணக்கம்.

இன்றைய தினம் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் 8வது ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றிருக்கின்றது. எட்டு முறை நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், தங்கள் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய்ப் பரவலைத் தடுப்பது குறித்தும், அதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும், அந்தந்த மாவட்டங்களில் நடைபெற்றிருக்கின்ற பணிகள் குறித்தும் விளக்கமாக தெரிவித்திருக்கின்றார்கள். அதோடு, மரியாதைக்குரிய தலைமைச் செயலாளர் தலைமையில், 12 முறை மாவட்ட ஆட்சியாளர்களின் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றிருக்கின்றன. அந்த ஆலோசனைக் கூட்டங்களில், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற விவரத்தை ஆலோசித்து அவர் தெரிவித்திருக்கின்றார். அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் அரசின் ஆலோசனையை ஏற்று சிறப்பாக பணியாற்றிய காரணத்தால், இன்றைக்கு கொரோனா வைரஸ் நோய்த் தொற்று பரவல் தமிழகத்தில் தடுக்கப்பட்டு, கட்டுப்பாட்டிற்குள் இருக்கின்றது, இறப்பு சதவீதம் குறைக்கப்பட்டிருக்கின்றது. அதற்கு அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கும், பல்வேறு துறைகளைச் சேர்ந்த செயலாளர்களுக்கும் மற்றும் மாவட்ட ஆட்சியரோடு இணைந்து பணியாற்றிய அனைத்து அலுவலர்களுக்கும் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். கொரோனா வைரஸ் நோய்த் தொற்று ஏற்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்களுக்கு உரிய முறையில் சிகிச்சை அளிக்கின்ற மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவப் பணியாளர்கள், தூய்மைப் பணியாளர்கள் மற்றும் கொரோனா வைரஸ் நோய் பரவலைத் தடுப்பதற்காக

நியமிக்கப்பட்டுள்ள உள்ளாட்சித் துறை, வருவாய்த் துறை, காவல் துறை மற்றும் உணவு மற்றும் கூட்டுறவுத் துறையைச் சேர்ந்த பணியாளர்கள் மற்றும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த பணியாளர்கள் அனைவருக்கும் அரசின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகையே அச்சுறுத்திக் கொண்டிருக்கின்ற இந்த கொடிய வைரஸ் நோய் இந்தியாவிலும், தமிழகத்திலும் பரவியிருக்கிறது. கிட்டத்தட்ட இந்த 4 மாதங்களில் அரசு எடுத்த நடவடிக்கையின் காரணமாக, கொரோனா வைரஸ் நோய்ப் பரவல் கட்டுப்பாட்டிற்குள் இருக்கின்றது, இறப்பு சதவீதம் குறைக்கப்பட்டிருக்கின்றது. ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டாலும், மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் முழுமையாகக் கிடைக்கக்கூடிய சூழ்நிலையை நாம் ஏற்படுத்தியிருக்கின்றோம். நியாயவிலைக் கடைகளில் விலையில்லா அரிசி, சர்க்கரை, பருப்பு, எண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது, அவர்களுக்கு உதவித் தொகையும் வழங்கப்பட்டுள்ளது. அமைப்புசாரா தொழிலாளர்களுக்கும் விலையில்லா அரிசி, பருப்பு, எண்ணெய் மற்றும் உதவித் தொகை வழங்கப்பட்டிருக்கின்றன.

நியாயவிலைக் கடைகளில் குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் வழங்குவதற்கு, டோக்கன் விநியோகித்து, குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்தில் பெற்றுக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. அரசைப் பொறுத்தவரை, மக்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் தொய்வில்லாமல் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு அம்மாவின் அரசு, ஏழை, எளிய மக்களுக்கு முகக்கவசம் வாங்கும் சூழ்நிலை இல்லையென்றாலும், அரசாங்மே வழங்கலாம் என்ற அறிவிப்பைக் கொடுத்து,

அதை நான் துவக்கி வைத்திருக்கிறேன். முதற்கட்டமாக, பெருநகர சென்னை மாநகராட்சி தவிர, அனைத்து மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளில் அனைவருக்கும் நியாயவிலைக் கடைகளின் மூலம் தலா 2 முகக்கவசங்கள் வழங்குவது ஆகஸ்டு 5–ஆம் தேதி முதல் நடைமுறைப்படுத்தப்படும்.

வேளாண் பணிகளைப் பொறுத்தவரை, எவ்விதத் தடையுமில்லாமல் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால், டெல்டா மாவட்டங்களில் குறித்த காலத்தில், குறித்த நேரத்தில் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விட்டிருக்கின்றோம். டெல்டா பகுதிகளில், 3,50,000 ஏக்கர் குறுவை சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டு, தற்பொழுது அதற்கும் மேலாக 3,54,000 ஏக்கர் பரப்பளவில் குறுவை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும், 15,000 ஏக்கர் குறுவை சாகுபடி செய்யப்படவுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். 10 ஆண்டுகளுக்குப் பிறகு இப்படி ஒரு வரலாற்றுச் சாதனையை அம்மாவின் அரசு நிகழ்த்தியிருக்கிறது. டெல்டா பகுதியிலிருக்கின்ற கால்வாய்களை அரசு சரியான முறையில் தூர்வாரியதன் காரணத்தினால், குறித்த காலத்தில் கடைமடை பகுதி முழுவதும் தண்ணீர் சென்றடைந்துள்ளது.

பொதுமக்களுக்குத் தேவையான காய்கறிகள் குறைந்த விலையில் தங்குதடையில்லாமல் முழுமையாகக் கிடைக்கின்றன. 100 நாள் வேலைத்திட்டம் கிராமப்புறப் பகுதிகளில் முழு வீச்சில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஏற்கனவே அறிவித்த குடிமராமத்துத் திட்டத்தில், தமிழகம் முழுவதும் கிட்டத்தட்ட 85 சதவீதப் பணிகள் நிறைவடைந்திருக்கின்றன, எஞ்சிய 15 சதவீதப் பணிகள் நிறைவடைந்து, பருவகாலங்களில் பெய்கின்ற மழைநீர் ஒரு சொட்டுகூட வீணாகாமல் முழுவதும்

சேமித்து வைக்கின்ற சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர்களை கேட்டுக் கொண்டிருக்கின்றேன்.

சென்னை மாநகராட்சியில் கொரோனா வைரஸ் நோய் பரவல் அதிகரித்துக் கொண்டேயிருந்தது. அதைக் கட்டுப்படுத்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அந்த வகையில், குடிசை மாற்று வாரிய வீடுகளில் வசிக்கின்ற மக்களுக்கும், குடிசையில் வசிக்கின்ற ஏழை, எளிய மக்களுக்கும் விலையில்லாமல் முகக்கவசம் வழங்கப்பட்டது. மேலும், சுமார் நாள்தோறும் 500 முதல் 600 வரை காய்ச்சல் முகாம்களும் நடத்தப்பட்டன. சென்னை மாநகராட்சியில் மட்டும் ஏறக்குறைய 25,532 காய்ச்சல் முகாம்கள் நடைபெற்று முடிந்திருக்கின்றன. அந்த முகாம்களில் சுமார் 14,50,000 நபர்கள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு, நோய்த் தொற்று ஏற்பட்டவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை அளிக்கப்பட்டதன் விளைவாக, படிப்படியாக சென்னை மாநகரத்தில் கொரோனா நோய்த் தொற்று குறைந்து கொண்டிருக்கிறது. மேலும், சென்னை மாநகரத்தில் வீடு, வீடாகச் சென்று காய்ச்சல், இருமல், தொண்டை வலி, சளி போன்ற அறிகுறிகள் தென்பட்டவர்களை கண்டறிந்து, பரிசோதனைக்குட்படுத்திய பிறகு, உடனடியாக அவர்களை மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை அளிக்கப்படுகிறது. இதனால் கொரோனா வைரஸ் பரவல் தடுக்கப்படுகின்றது. சென்னையில் மட்டும் ஏறக்குறைய 20,000 பணியாளர்கள் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றார்கள். அதேபோல, பிற மாவட்டங்களிலும் காய்ச்சல் முகாம்கள் நடைபெற்றதன் காரணத்தினால், அதில் ஆயிரக்கணக்கானோர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு, சிகிச்சை பெற்ற காரணத்தினால் கொரோனா வைரஸ் நோய்ப் பரவல் கட்டுப்ப்டுத்தப்பட்டுள்ளது. சென்னை மாநகரத்தில் மட்டும்

அரசால் நியமிக்கப்பட்ட அலுவலர்கள் பலமுறை ஒரு வீட்டிற்கு சென்று அவர்களை விசாரித்து, நோய் அறிகுறி தென்பட்டவர்களை பரிசோதனைக்குட்படுத்திய காரணத்தால், சென்னை மாநகரத்தில் படிப்படியாக கொரோனா வைரஸ் நோய்ப் பரவலை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்திருக்கிறோம். அதேபோல, சென்னை மற்றும் அனைத்து மாவட்டங்களிலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்குத் தேவையான படுக்கை வசதிகள் தயார் நிலையில் இருக்கின்றன. நடமாடும் மருத்துவமனைகள், சென்னையில் 70, மற்ற மாவட்டங்களில் 1,126 என மொத்தம் 1,196 ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இதன் விளைவாக, நோய்த் தொற்று அறிகுறி அதிகமாகவுள்ள பகுதிகளுக்கு நடமாடும் மருத்துவமனை சென்று, அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்களைப் பரிசோதனை செய்து, நோய் அறிகுறி தென்பட்டால் சிகிச்சை அளித்து, நோய்ப் பரவல் தடுக்கப்படுகிறது.

தொழிற்சாலைகள் முழுமையாக இயங்க வேண்டுமென்ற கோரிக்கையை ஏற்று, சென்னையில் 50 சதவிகிதப் பணியாளர்களுடனும், சென்னை தவிர, பிற மாவட்டங்களில் 100 சதவிகிதப் பணியாளர்களுடனும் தொழிற்சாலைகள் இயங்க அனுமதி வழங்கப்பட்டு, தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. கொரோனா வைரஸ் நோய்ப் பரவல் காரணமாக தங்கள் சொந்த மாநிலங்களுக்குத் திரும்பிச் சென்ற வெளிமாநிலத் தொழிலாளர்கள் மீண்டும் தமிழ்நாட்டில் பணிபுரிய விருப்பப்படுவதாக தொழில் நிறுவனத்தினர் தெரிவித்ததாக அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்களும் தெரிவித்ததைத் தொடர்ந்து, அவர்களுக்கு அனுமதி வழங்கலாம் என்ற உத்தரவும் அரசால் வழங்கப்பட்டு, வெளிமாநிலத் தொழிலாளர்களை பரிசோதனை செய்து, அரசின்

வழிகாட்டுதல்களின்படி பணியில் அமர்த்திக் கொள்ளலாம் என்ற அனுமதியும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ், உலகையே அச்சுறுத்திக் கொண்டிருக்கிற இந்தத் தருணத்தில், இந்தியாவிலேயே தமிழகத்தில் சிறப்பான முறையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய முறையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. குணமடைந்தவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. மொத்த பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை நேற்றைய தினம் வரை **2,27,688.** குணமடைந்து வீடு திரும்பியவர்கள் எண்ணிக்கை **1,66,956.** தற்போது சிகிச்சையிலுள்ளவர்களின் எண்ணிக்கை **57,073.** இறந்தவர்களின் எண்ணிக்கை **3,659.** மாண்புமிகு அம்மா அரசு எடுத்த நடவடிக்கையின் காரணமாக இறப்பு சதவிகிதம் குறைக்கப்பட்டிருக்கின்றது, குணமடைந்தவர்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. நாளொன்றுக்கு சுமார் **63** ஆயிரம் நபர்களுக்கு பரிசோதனை செய்யப்பட்டு, அதிகமான பரிசோதனை செய்யப்படுவதில், இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது.

அதேபோல, தமிழகத்தில் **119** பரிசோதனை நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இதுவரை **24,75,866** பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அரசைப் பொறுத்தவரை மக்களின் எண்ணங்களைத் தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது.

தற்போது பருவமழை தொடங்கியுள்ளதால், பொழிகின்ற மழைநீர் முழுவதையும் சேமித்து வைக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சிலருக்கு கொரோனா வைரஸ் நோய்த் தொற்று ஏற்பட்டு அவர்கள் இப்பொழுது சிகிச்சையில் இருந்து கொண்டிருக்கின்றனர். அதேபோல, உள்ளாட்சித் துறை, காவல் துறை, வருவாய்த் துறை, உணவுத் துறை, கூட்டுறவுத் துறை மற்றும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த பணியாளர்கள் இந்தக் கொரோனா வைரஸ் நோய்த் தொற்று தடுப்புப் பணியில் ஈடுபட்டிருந்தபொழுது, நோய்த் தொற்று ஏற்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். அனைவரும் விரைவில் பூரண குணமடைய வேண்டும், நலம் பெற வேண்டுமென்று இறைவனை நான் பிரார்த்திக்கின்றேன்.

அதேபோல, மக்களும் அரசுக்கு முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும். மக்கள் எந்த அளவுக்கு ஒத்துழைப்பு தருகின்றார்களோ, அந்த அளவுக்குத்தான் கொரோனா வைரஸ் பரவலைத் தடுக்க முடியும். நான் ஏற்கனவே பலமுறை குறிப்பிட்டதைப் போல, பொதுமக்கள் வெளியில் செல்லும்போது கண்டிப்பாக முகக்கவசம் அணிய வேண்டும், மார்க்கெட், மளிகைக்கடை, வங்கிகள் போன்ற இடங்களுக்குச் சென்றாலும், சமூக இடைவெளியைப் பின்பற்ற வேண்டும். வெளியில் சென்று வீடு திரும்பும்பொழுது, கை, கால்களை கண்டிப்பாக சோப்பு போட்டுக் கழுவ வேண்டும். வீட்டையும், கழிப்பறைகளையும் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். இவற்றையெல்லாம் கடைபிடித்தாலே கொரோனா வைரஸ் நோய்த் தொற்றுப் பரவலைத் தடுத்து, நாம் இயல்பு நிலைக்குத் திரும்ப முடியும். எனவே, பொதுமக்கள் அனைவரும் அரசு அறிவித்துள்ள வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். இந்நோய்ப் பரவலைத் தடுப்பதற்கு, இந்தியாவிலேயே, தமிழகம் கடுமையான முயற்சிகளை எடுத்து வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

உலக சுகாதார அமைப்பு, மத்திய சுகாதாரத் துறை, ஐ.சி.எம்.ஆர்., தமிழக மருத்துவ நிபுணர்கள் அளிக்கின்ற அறிக்கை மற்றும் ஆலோசனைகளின்படி அம்மா அரசால் அனைத்து வழிகளிலும் நோய்ப் பரவலைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நான் மீண்டும், மீண்டும் பொதுமக்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம் அரசு அறிவித்துள்ள வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டுமென்று அருள்கூர்ந்து கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.

------

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**